**வரையறுக்கப்பட்ட இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபனத்தின் 2023 ஏப்ரல் 01 திகதி முதல் 2025 மார்ச் 31 திகதி முடிவடைந்த இரண்டு ஆண்டு காலப் பகுதிக்கான கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கை**

வரையறுக்கப்பட்ட இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபனத்தின் (''கம்பனி'') 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த இரண்டு ஆண்டு காலப் பகுதிக்கான செயற்பாட்டு அலுவல்கள் தொடர்பான இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியல் அமைப்பின் 154(1) அம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கு இணங்க என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பான முகாமைத்துவத்தினதும் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினரினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 16(1) உபபிரிவின் பிரகாரம் அனைத்து கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்களினாலும் அந்த நிறுவனம் தொடர்பான வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 16(2) உபபிரிவின் பிரகாரம் அனைத்து கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் தொடர்பாக வருடாந்த நிதிக்கூற்றுக்கள் விதிகளின் மூலம் காட்டக்கூடியவாறு காலப் பகுதியொன்றில் அந்த நிறுவனத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த அதிகார சட்டத்தின் 38(1)(ஈ) உபபிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்தில் தயாரிக்கபட நேரிடுகின்றது என உறுதிப்படுத்த வேண்டியதுடன், மேலும் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டும்.

**2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடு தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டம் மற்றும் 2007 இன் 07 இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் அடங்குகின்றன.

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரிவு 150(1) இன் படி ஐந்தொகை திகதியில் இருந்து ஆறு மாதங்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்காக பொறுப்பானவர்களினால் உறுதிப்படுத்தப்படுகின்றதென கம்பனியின் பணிப்பாளர் சபை உறுதிப்படுத்த வேண்டும்.

**2.1 நிறுவனம் தொடர்பான அறிமுகம்**

கூட்டுத்தாபனம், 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1973 ஒக்தோபர் 10 ஆம் திகதி நிறுவப்பட்டிருந்ததுடன், 1982 ஜுலை 01 திகதி ''இலங்கை (சிலோன்) இறப்பர் மெனுபெச்சரின் கம்பனி லிமிடட்'' என்ற பெயரில் கம்பனிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனம் ஒன்றென சட்டப்பூர்வமாக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் 1995 மார்ச் 06 திகதி ''ஸ்ரீ லங்கா இறப்பர் மெனுபெச்சரின் என்ட் எக்ஸ்போர்ட் கோபரேசன் லிமிடட்'' என்ற பெயரில் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டிருந்ததுடன், 2007 இன் 07 ஆம் இலக்கம் கொண்ட புதிய கம்பனிச் சட்டத்தின் கீழ் 2009 ஒக்தோபர் 27 ஆம் திகதி மீண்டும் கூட்டிணைக்கப்பட்டது.

கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 06 தொழிற்சாலைகளில் 04 தொழிற்சாலைகள் மாத்திரம் குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. கம்பனி 2025 செப்தம்பர் 03 திகதிய அமப/25/1570/804/185 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி ஒழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

**2.2 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உளமை**

2016 ஆண்டின் பின்னர் கூட்டுத்தானபத்தின் கணக்காய்வு அலுவல்கள் தேசிய கணக்காய்வு அலுவலத்திற்கு சாட்டப்பட்டிருந்த போதிலும், இதுவரை நிதிக்கூற்றுக்கள் ஏதும் தேசிய கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. கம்பனியின் இறுதியாக தனியார் கணக்காய்வு நிறுவனத்தினால் கணக்காய்வு செய்யப்பட்ட 2011 மார்ச் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள், பொறுப்புகள், வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **விடயம்** | **தொகை**<br>**ரூபா** |
|---|---|
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | 91,269,967 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 832,852,873 |
| மொத்தச் சொத்துக்கள் | 924,122,840 |
| நடைமுறை பொறுப்புக்கள் | 45,828,678 |
| நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் | 929,570,102 |
| மொத்தப் பொறுப்புக்கள் | 975,398,780 |
| தேறிய சொத்துக்கள் / உரிமை | (51,275,940) |
| மொத்த உரிமை மற்றும் பொறுப்புக்கள் | 924,122,840 |
| மொத்த வருமானம் | 75,166,023 |
| மொத்தச் செலவு | 77,894,846 |
| **பற்றாக்குறை** | **(2,728,823)** |

**2.3 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2021 நவம்பர் 16 திகதிய திறைசேரிச் செயலாளரின் பீஈடீ 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் அதற்கிணங்க வெளியிடப்பட்டிருந்த செயற்பாட்டுக் கைநூலின் பிரிவு 6.6 இன் பிரகாரம் கணக்காய்வு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2016 ஏப்ரல் 01 திகதி முதல் 2025 மார்ச் 31 திகதி வரையான 09 வருட காலப் பகுதிக்குரிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கைகள் இந்த அறிக்கைத் திகதி அளவிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. மேலும், 2007 இன் 07 ஆம் இலக்க புதிய கம்பனிச் சட்டத்தின் விதிமுறைகளின் படி 2009 ஆம் ஆண்டு முதல் இதுவரை வருடாந்த அறிக்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் கம்பனிப் பதிவாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி அலுவல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஜனவரி 23 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி 06 மாத காலப் பகுதிக்குள் கூட்டுத்தாபனத்தை ஒழிப்பதற்காக தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்தது. 2023 ஜூன் 01 திகதி முதல் 2023 ஒக்தோபர் 31 திகதி வரை கால நீடிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தை ஒழிக்கும் அலுவல்கள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், தகுதி வாய்ந்த அதிகாரியின் கால நீடிப்பு அல்லது புதிய தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவர் நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு MF/PE/016/CM/2025/203 இலக்கம் கொண்ட 2025.08.24 திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் ‘‘செயற்படு மட்டத்தில் காணப்படாத அரச தொழில் முயற்சிகளை மூடிவிடுவதற்காக ஒழிப்பாளர்களை நியமனம் செய்தல்’’ இற்காக அமப/25/1570/804/185 இலக்க மற்றும் 2025.09.03 திகதிய தீர்மானத்தின் படி ஒழிப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்படவுள்ளது. கைத்தொழில் அமைச்சின் முன்னைய மேலதிக செயலாளர் திரு. என்.ஜி பண்டிதரத்ன அவர்கள் 2023.11.01 திகதி பெருந்தோட்ட அமைச்சின் கடமை ஒப்புக்கொள்ளல் கடிதத்தின் மூலம் கடமை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், ஒழிப்பாளர்களுக்குரிய கொடுப்பனவுகள் ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், கோரிக்கையுடனான கடிதம் தவிர அவர் தொடர்பான ஏனைய எழுத்துமூலத் தகவல்களும் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | குறிப்பிட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தாமதமின்றி செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | திறைச்சேரியினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 1379.54 மில்லியனிற்கான கடன் தொகை மற்றும் வட்டியை தீர்ப்பதற்கு எல்பிட்டிய போம் இறப்பர் தொழிற்சாலையை தகைமையுடைய முதலீட்டாளர் ஒருவருக்கு குத்தகைக்கு கொடுப்பதற்கும் அதன் இயந்திர உபகரணங்களை விற்பனை செய்வதற்கும் 2019 ஆண்டின் போது அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இந்தச் தொழிற்சாலையின் கட்டிடம் மற்றும் 03 உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள் | நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு MF/PE/016/CM/2025/203 இலக்கம் கொண்ட 2025.08.24 திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் ‘‘செயற்படு மட்டத்தில் காணப்படாத அரச தொழில் முயற்சிகளை மூடிவிடுவதற்காக ஒழிப்பாளர்களை நியமனம் செய்தல்’’ இற்காக அமப/25/1570/804/185 இலக்க மற்றும் 2025.09.03 திகதிய | குறிப்பிட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தாமதமின்றி செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| பாழடைந்திருந்ததுடன், அங்கு காணப்படுகின்ற உபகரணங்களில் பாரிய எண்ணிக்கையானவை களவாடப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது. | தீர்மானத்தின் படி ஒழிப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்படவுள்ளது. அப்போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி எல்பிட்டிய போம் இறப்பர் தொழிற்சாலையில் உள்ள இயந்திரங்கள் ஏலம் விடப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் பணம் திறைசேரிக்கு வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 3.2 செயற்பாட்டு அலுவல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) (i) மாவனல்ல மையவிலக்குத் தொழிற்சாலை** | | |
| மாவனல்ல மையவிலக்குத் தொழிற்சாலையில் உடைந்து விழுந்துள்ள பிரதான கட்டிடத்தின் கூரையை புனர்நிர்மாணம் செய்து கொடுக்காமையால் குத்தகையாளரினால் 2018 ஜூலை முதல் குத்தகை செலுத்தியிருக்காததுடன், 2018 ஜுன் வரை செலுத்தியிருந்த குத்தகையில் அந்த ஆண்டில் அதிகரிக்கப்பட்ட குத்தகை செலுத்தியிருக்கவில்லை. 07 வருடங்களுக்கு மிகையான காலத்தினுள் அறவிடப்பட வேண்டிய மொத்த நிலுவை குத்தகைத் தொகை ரூபா 44,869,590 தொகையாக காணப்பட்டதுடன், பிரதான கட்டிடத்தின் கூரையின் புனர்நிர்மாண அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | தொழிற்சாலையின் புனர்நிர்மாண அலுவல்களை பூர்த்தி செய்து உரிய குத்தகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ii) மாவனல்ல டயர் டியுப் மற்றும் பதுரெலிய கிரேப் இறப்பர் ஆகிய இரண்டு தொழிற்சாலைகள்** | | |
| குத்தகை உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 05 இன் படி 2021 மார்ச் 14 திகதி முதல் அதிகரிக்கப்பட வேண்டிய குத்தகை அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 மார்ச் 13 திகதி முதல் 2021 மார்ச் 13 திகதி வரையான காலப் பகுதிக்காக அதிகரிக்கப்பட்ட குத்தகை ரூபா 3,908,016 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. அதேபோல், 2020 ஏப்ரல் முதல் 2025 மார்ச் வரை இந்த இரண்டு | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகை அறவீடு செய்ய வேண்டியதுடன், கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் உரிய முறையில் வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொழிற்சாலைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய குத்தகை தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | மேற்கூறிய 03 தொழிற்சாலைகள், அரச மூலவல முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தின் மூலம் தனியார் கம்பனியொன்றுக்கு 2014 ஆண்டின் போது குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், தற்போது அந்தக் கூட்டுத்தாபனம் செயற்படாமல் காணப்படுவதனால் குத்தகை உடன்படிக்கையை நாளதுவரை ஆக்குவதற்கு இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. தற்போது தொழிற்சாலையின் குத்தகை தொகையை சேகரித்தல் அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் மூலம் நடைபெறுகின்றது. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகை அறவீடு செய்ய வேண்டியதுடன், கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் உரிய முறையில் வழங்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | **வஹரக்க கிரேப் இறப்பர் தொழிற்சாலை** | | |
| | இந்தத் தொழிற்சாலை 2011 பெப்ரவரி 01 திகதி முதல் 2026 ஜனவரி 31 திகதி வரை 15 வருடங்களுக்கு தனியார் கம்பனியொன்றுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்தக் கம்பனியினால் 2021 ஆண்டின் போது தொழிற்சாலை கைவிட்டுச் சென்றிருந்தது. இந்த தனியார் கம்பனியில் இருந்து தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய குத்தகை மற்றும் உடன்படிக்கையின் பிரிவு 09 இன் பிரகாரம் தாமதக் கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதா போன்ற விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், 2021 ஆகஸ்ட் 01 முதல் 2026 ஜனவரி 31 திகதி வரை ரூபா 85,000 மாதாந்த குத்தகை மேற்கூறிய தொழிற்சாலை வேறு தனியார் கம்பனியொன்றுக்கு மீண்டும் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்தக் கம்பனியுடன் அணுகியிருந்த உடன்படிக்கையின் மூலப் பிரதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய குத்தகை மற்றும் தாமதக் கட்டணத்தை அறவீடு செய்வதற்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், குத்தகை உடன்படிக்கைகளின் மூலப் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(இ)** | **தொடங்கொட மோல்டட் தொழிற்சாலை** | | |
| | மரணச் சொத்து வழக்கொன்று மூலமாக தொழிற்சாலை அமைந்துள்ள காணி உரிமையாளரினால் மீண்டும் உரித்தாக்கப்பட்டிருந்ததென அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பான உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்காததுடன், இந்த தொழிற்சாலையில் காணப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை கணக்காய்வினால் கண்டறிய முடியாமல் இருந்தது. | தொடங்கொட மோல்டட் தொழிற்சாலை மரண சொத்து வழக்கின் மூலமாக குறிப்பிட்ட தொழிற்சாலை அமைந்துள்ள காணியின் உரிமையாளரினால் மீண்டும் உரித்தாக்கப்பட்ட ஆவணங்கள் அல்லது தகவல்கள் கண்டறிய முடியாமல் உள்ளதுடன், அது தொடர்பாக தகுதி வாய்ந்த அதிகாரியாக கடமையாற்றிய எஸ்.டப்ளியூ. கமகே அவர்களுக்கு அறிக்கையொன்று சமர்பிக்கும் படி அறிவிக்கப்பட்டது. | இந்த உரித்தாக்கல் தொடர்பாக வழக்குத் தீர்ப்புப் பிரதி மற்றும் எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |